உ

உலகப்பிரசித்தி
பெற்ற
கன்னிச்சமீன்
சரபம்
உடுமலை

# முத்துசாமிக் கவிராயவர்கள்

இயற்றிய
பக்திரஸ
கீர்த்தனங்கள்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்
ரப்பர்ஸ்டாம்பு மேக்கர், புக்ஷாப், புதுமண்டபம்
விலை] மதுரை. [அணா 4
மதுரை விவேகபாநுப் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1914.

நூதன இந்துஸ்தான் பாட்டுகளும் அடங்கியது

## ஸ்ரீசிவசுப்பிரமணியக்கடவுள் பேரில்

# இந்துஸ்தான் பஜனை கீர்த்தனை

உலகத்தின் கண் வித்வசிரோமணிகள் ஏற்படுத்திய கீர்த்தனைகளை அனேக பக்திமான்கள் பார்த்திருக்கலாம். ஆயினும் மதுரை மாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ கலியாணசுந்தரம் பிள்ளையவர்களாலியற்றிய மேற்கண்ட கீர்த்தனையானது படிப்பவர்கட்கும் கேட்பவர்கட்கும் பரவசத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கும் என்பதிலையமில்லை.

புஸ்தகம் 1-க்கு விலை 0—2—0.

## ஷை இரண்டாம் பாகம்.

இதில் சிவபஜனைகளுக்குரிய கீர்த்தனைகளும் முதற்பாகத்திலில்லாத திருப்புகழ் பாடல்களும் விஷ்ணுபஜனைக்குரிய இனிய வர்ணமெட்டுகளாலமைந்த ஸ்ரீ கோபாலகிருஷ்ண நாமசங்கீர்த்தனங்களும் விஷ்ணுபேரில் திருப்புகழ் பாடல்களும் பார்ஸி நூதன இந்துஸ்தான் பாடல்களும் சேர்த்துள்ளது. விலை அணா 0—2—0.

அல்லியரசாணி சரித்திரம் நூதனமானது 0—2—0.
ஷை 2-ம் பாகம் 0—2—0.
நல்லதங்காள் சரித்திரம் நூதனமானது 0—2—0.
ஷை இரண்டாம் பாகம் படத்துடன் 0—2—0.
கோவிலன் சரித்திரம் முதல் பாகம் 0—2—0.
ஷை 2-ம் பாகம் 0—2—0.

மலையாள மாந்திரீக ரத்னாகரம் சகல தேவதாவசியமும் அடங்கியுள்ளது. மனைகள் தோறும் அவசியம் இருக்கவேண்டியது

விலை அணா 0—12—0.

பரமசிவ துணை.

உலகப்பிரசித்தி பெற்ற

கன்னிச்சமீன் சரபம் உடுமலை,

# முத்துசாமிக் கவிராயரவர்கள்.

இயற்றிய

# பக்திரஸகீர்த்தனங்கள்.

வெள்ளிக்குரிச்சி ஜமீந்தார் விஜய குமார விஸ்வநாத
பங்காரு திருமலை நாய்க்கர் என்ற
தர்மராஜா அவர்கள்
விருப்பத்தின் பேரில்

மதுரை, புதுமண்டபம், புக்ஷாப், இ. மா.

## கோபாலகிருஷ்ணகோனால்

மதுரை விவேகபாநுப் பிரசில் பதிப்பிக்கப்பெற்றது.


விலை] 1914 [அணா 4

ரிஜிஸ்தர் காபிரைட்.

MADURA TAMIL SANGAM

7134

7134



7134
THE MADURA TAMIL SANGAM

உ

பரமபதி துணை.

கன்னிச் சமீன் சரடம்

உடுமலை

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

—(*)—

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சீராருஞ் சங்கிதஞ் சேர்பதங்க ளிங்கிதமாய்ப்
பேரரித் தாரணியிற் பேசுதற்கு—நேராரும்
துங்கமிகுஞ் சங்கரனைச் சுற்றிக் கனிகொண்டோன்
தங்கக் கழலிணையே சார்பு.

சந்தவிருத்தம்.

சகலஜனமன ரமியவிகசித தருணநாடக ராஜரும்
புகழுமவரொடு பழகுமகளிரு மொருமை நாடக மேபுகும்
சொகுசுபலவித மிசையிலிசைவன சுரபிவாயமு தேயென
முகடளவுவர மருள்விகடகய முகவிநாயக மூலனே.

இராகம்—நாட்டை, தாளம்—ஆதி.

பல்லவி.

கணநாதா உனதொரு
கடாக்ஷிப்பதற்க டாக்ஷி வித்வ வரமதுர (கண)

அநுபல்லவி.

மணமேவும் பங்கய
மாமலரடியே காமுறுகின்றேன் (கண)

சரணங்கள்.

அகவலோதி துதிசெய்
அவ்வையாரைக் கைலையேறச்செய்பவ (கண)

மகிமைத்தண்ட பாணி
மகிழ் சோதர வீரியகாரிய நய (கண)

மூலாதாரா யானை
முகனே பார்வதி மகனேபிரணவ (க)

தாலமுழுக்கு சாமி
நாபும் பரவுங் கரவங் குசதர (கண)

காவுநச்சுங் குஷிகுஷிக்கரும் என்ற வர்ணமெட்டு-
இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-ஆதி

பல்லவி

வேணும் வேணும் திருவருள் புரி கணபதிமத
வேளமுகத்தவனே பரமத
யாளமகத்துவனே வல்லபைப
மேவுசுகத்தவனே (வேணு)

அநுபல்லவி.

காணுமெத்தேவர்க்கும் ஆதிதேவா
கண்ணெதிரே யென்முன் வா வா
கார்யாநுகூலம் நேர்வதுசீலம்
தார் அணிந்து முத்துசாமி போற்றுங்காலம்
கண்டு கண்டு கண்டு (வேணு)

சரணம்

துங்கதா தன்குள மேவி மேவி
தொண்டர் மலர்வகை தூவி
தோத்திரங்கோடி கீர்த்தனம் பாடி
தொல்லூதியம்பெறு நல்லூரில் நீடி
சுகம் சுகம் சுகம் (வேணு)

## ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் துதி.

### வெண்பா.

பழனியப்பா வேரகத்தப் பாசெந்தி லப்பா
அழகுமலி சோலைமலை யப்பா—கழகம்
புகழ்பரங்குன் றப்பா பொறுப்பினங்க டோறும்
திகழ் முருகப் பாகருணை செய்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

### பல்லவி.

பாராமுகமேனையா இன்னமுஞ்சும்மா
பாராமுகமேனையா (பாரா)

### அநுபல்லவி.

சீராருப்புக்கோட்டை பேராய் வளர் திருநல்
லூரா மயிலேறுஞ்சிங்காரா முத்துக்குமார
சீலா அமுதலிங்கர்
பாலா அடியர்க்கனு
கூலா சத்துருசங்கார
வேலா நாலா விதத்தும் (பாரா)

சாரமில்லாதசமு சார வாழ்கையிலேனி
சாரம் மென்மேனும்வந்து சார மயங்கிப்போனேன்

தஞ்சம் உன்னிருபாத
கஞ்சம் என்னிடமேனே
வஞ்சம் கொஞ்சமாகிலும்
நெஞ்சம் திரும்பிடாத (பாரா)

நாடுநகர்நிதங்கொண் டாடு செல்வமிருந்தும்
தேடும்பேராசையல்லால் பாடும் பஜனைக்கில்லை
நாட்டம் காவேசேர் திருக்
கூட்டம் மகிழ்தரும்
ஸ்நேஷ்டம் ——— ஆகிலும்நான் எ
தேஷ்டம் செய்பவிடாத (பாரா)

வேதன் அமரபுரு கூதன் பொதிகைமலை
நீதன் அருணகிரி நாதன் பரவுமுத்தி
வித்து நீயேபரம
வஸ்து உடுமலையின்
முத்து சாமிதமிழ் வா
சித்தும் செவிக்கொள்ளாத (பாரா)

---

## திருமால் துதி.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெயராம ரகுபதி ஜெயராம
தீர வீர மேரு பார கோதண்ட (ஜெ)

அநுபல்லவி.

அபராம ஷ்டிமையை
ஆளவேத யாளபோத முதவிசெய் (ஜெ)

சரணம்.

நித்யமோக்ஷ கதிபெற
நினதுநாம மனதுநேமமொடுசொல்லி
முத்துசாமி கவிபுனை
மோகதாக மேகமாக வளர்தரு (ஜெ)

---

மான்குசரியா என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமஜெபமே நாளு நயமே
காமோதிஞுஙுண்டு க்ஷேமாதிசயமே (ராம)

அநுபல்லவி.

காதர்தருமணிக் கோதண்டவீர (ராம)

சரணம்.

நெஞ்சே பிரண்டெழுத்தை
நேரமெல்லா முச்சரித்து
நேசர்மகிழ் வாரேனுமோர்
வாசகந மஸ்கரித்து

மிஞ்சுமவன் கீர்த்தனம்பாடிக்
கொஞ்சுமுத்து சாமியைக்கூடி
தஞ்சமகலா திருநீடி
ரஞ்சிதவ யோத்தியிற்கிரீடி (ராம)

---

## பரமசிவன் துதி.

எங்கேபோனாலுமுன்கூட என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு. தாளம்-ஆதி.

பல்லவி.

பத்திசாதிக்கவி டாது மனைப்
பாசபந்தம் பொல் லாது (பத்தி)

அநுபல்லவி.

அத்தியரவந் தொடையாபணிவோனே
துங்கநல்லூரமுத லிங்கப்பெருமானே. (பத்தி)

சரணங்கள்

இல்லை இல்லை யென்ற ஏக்கம் பொரு
ளோராளப்பேராசை வீக்கம்
சொல்லின்பப் பெண்ணுடன் தூக்கம் கைத்
துட்டுப் புரட்டுவதி லூக்கம்
நல்லபுத்தியெல்லாம் நில்லாமலே நீக்கம்
நாடோடி நாய்நானே சுட்டெறிவெம்மார்க்கம் (பத்தி)

சக்ராத்திகளின் சண்டை பஞ்
சாபம்பேச்செனக்கோர் கொண்டை
மூக்கிக்கத்தியே தொண்டை கட்டி
மூளைவறண்டது மண்டை
சிக்குமூலண்டைப்போ லுட்கினேன் பொன்கண்டை
சென்டைத்தேடிச்செல்வேன் தண்டைப்பாதத்தண்டை ()

பல்லுப்போன ஒரு சிப்பு பறி
பண்ணினதோர் பூந் தோப்பு
வெல்லுவார்முன்கைவி ருப்பு வெண்
மீசை மேலுங்கைக் கோப்பு
செல்வச்சினவேங்கை சிக்கியகட்டாப்பு
தெகஷ்ணமூர்த்தியெஞ் சிவனேயுன் வெண்காப்பு (பதி)

உற்றேனுடுமலைப் பேட்டை வங்
தோதினேனருப்புக் கோட்டை
கற்றேன்யானுஞ்சில பாட்டை இன்னங்
கட்டேன் குடியிருக்க வீட்டை
மற்றேன் சொல்லவேணும் வசிசைகெட்ட கேட்டை
மையற்கு மங்குதான் செய்வதெல் லாஞ்சேட்டை (பதி)

பற்றிபெறியுந்தலே மேலே மணம்
பரிமளிக்கும் பூ மாலே
பெற்றணிந்தகதை போலே பிழை
மோசமாகுமுன் ஞாலே
சுற்றிரங்கிமுத்து சாமித்தமிழ்ப்பாவே
துஞ்சந்தா ராயோவுன் தாமரைப் பூங்காலே (பத்)

இராகம்-இந்துஸ்தான் காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்த உடம்பை நம்பி யிருக்கலாமா
வந்தழுவாசைக்கே யுயிர் மரிக்கலாமா (இ)

எத்தனைகோடி பேரோ இறந்து போனார்
வைத்தபொருள்கள் யாவு மறந்துபோனார் (இ)

நம்பவேண்டிய தொப்பற்ற நாதன் பாதம்
அம்புவிதனக்கிதேநல் லருணமப்போதம் (இ)

தத்துவாதீதமிதெய்வம் சதாசிவமே
முத்துசாமிகவிப்படி மொழிகுவமே. (இ)

கபரதரஹா என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

ஆரிடஞ்சொல்லி நான்
ஆறுவேனமுதவல்லி (ஆரி)

அநுபல்லவி.

நேரிலே யெனக்கு நீதாயல்லவோ
நீதியேது மில்லையோ பின்
நித்தநித்தமுந் தொல்லையோ (ஆரி)

சரணங்கள்.

அண்ணன் மகன் பிரமன் அமைத்தது போதும்
அந்தலட்சுமிக்குந்தான் அசட்டையெப்போதும்
எண்ணில்லா முறையிட்டும் ஏறுதே யுன்காதும்
ஏதுமறியேனென்மீது மோதுந் தீதுஞ்சூதும் வாதும் (ஆரி)

நீமனக்குரங்கு செய்வது சேட்டை
திருட்டுத்தனமெனி லதற்கொரு வேட்டை
எமாமருள் கொண்டுபா வந் தேடுமென் தேட்டை
வாணருக்குட்கெட்டகேட்டை வீணருக்குப்பட்டபாட்டை

மலைபத்துவஜராஜ பாண்டியகுமாரி
மங்களவமுத லிங்கபர் பாரி
தலையுடு மலைமுத்து சாமி நிதங்கோரி
சாற்றுதிரு நல்லூரைக் காப்பாற்றுநீயேதானுதாரி. (ஆரி)

## ஸ்ரீ மீனம்பிகை துதி விருத்தம்.

தாயிருக்கப் பிள்ளை தானேனங்கலாமா
தரித்திரந்தனிலு மையன்
தாங்கியூட்டுவதுண்டு தாரணியிலென்னை நீ
தனிமைபாய் விடுத்தனை யினி
வாயிருக்கும் பிள்ளை வழிகண்டு வாழுமென
மற்றெண்ணியோ வலாது
வன்மமோ நான்செய்த கன்மமோ அம்மம்ம
வனமிருக மனிதர் தம்பால்
போயிருக்கப்பெற்ற புன்மையால் என்மையால்
புகலொணு விகல்செயு நலம்
புக்கறிகிலேன் வேறு திக்கறிகிலேன் வந்து
போதங் கொடுத்தருளுவாய்
வேயிருக்கும்பவள வாயன் சகோதரி
விளங்குமரி மள பார்வதி
வேனில் வேடரு வெம்மை யானிதீர் தரு செய்யை
மீனலோசனி யம்மையே.

## ஸ்ரீ மீனாம்பிகை துதி.

சந்த்ராசரசமதலோலா என்ற வர்ன மெட்டு.

இராகம்—தேசிகம் தாளம்—ஆதி.

### கண்ணிகள்.

அம்மா மதுரை மீனாக்ஷி உன்
னருமைப்பான காக்ஷி கிடைத்தால்
அடிமைக்கேது தாக்ஷி
அதுமூலக சாக்ஷி (அம்)

அம்மா சும்மாயிருப்பதும் நீயேது என்
துன்பம்சொல் லொண்ணாது கடைக்கண்
சுட்டிப்பார்த்தென் மீது
சுகமருளிப் போது (அம்)

பெற்ற தாய்க்குப்பிள்ளை விரோதம்
தகாது நானுன் பாதம் பணிந்தேன்
தாங்கிக்கொள்ள நீதம்
தவரிடிற் ப்ர மாதம் (அம்)

ரத்ன மூக்குத்திபலங் காரி முத்து
சாமிசொல்லு தாரி சொக்கேசர்
முத்தங்கொஞ்சும் பாரி
மோகனகெம் பீரி. (அம்)

## ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் துதி.

### விருத்தம்.

மணிகொண்ட கிரியைப்போலும் வாங்குபூ ஞாலுஞ் சாலுந்
திணிகொண்ட சத்திவேலுந் திமிர்மணக்கடம்புநாலும்
அணிகொண்ட மார்பின்மாலுந் தரிவையர் இரண்டு பாலும்
பணிகொண்ட தண்டைக்காலும் பாடுவாமேலு மேலும்.

### ஓரடிப்பதம்.

இராகம்—தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

திருநல்லூர்க்கார்த்திகைத் தீபம் தெரி
சித்தவர்க்குப் புண்ய லாபம்
வைத்தது ஜெ கப்பிர தாபம். (திரு)

அநுபல்லவி.

உருகியானந்தக்கண்ணீர் பெருகிவெள்ளங்கொண்டோட
உத்தமமார்க்கமென்று சித்தமற்றோர்க்குங்கூட
உச்சிகு வித்தக ரத்தினர் நீட
மெய்ச்சிவ பத்திப முத்த விசேட

உடலம்புளகம் பெறவே புவனியி
னிடைநின்றமுதம் பொழிமாமுகிலென
ஓவர் மூவர்சொன்ன தேவாரத்திருப்பாட்டை
ஓதிப்பஜனைவந்த வீதிக் கருப்புக்கோட்டை (திரு)

### சரணம்.

மூலமாமுன்னெழுந்த பாலசந்த்ரகணேசன்
மூதண்ட மெங்குந்தன்கை மூக்கிலுணரும்வாசன்
சாலவினை யன்பர்க்குத் தவிர்க்குமங்குசபாசன்
தன்மூஷிகத்தில்வரத் தம்பியானவுல்லாசன்

சமரச குமரகுரு பொன்னகரில்
அமரர் அமரமுன்னொரு தரந்தரு

சந்நிதனைமேவல்விநோத முத்துக்குமாரசாமி
தித்திக்க வேயிருபக் கத்திற்குலாவுதினைத்

தானவள்ளி மாது தெய்வ யானையெனுமாது
மானயன ரோடுதிகழ் கானமயில்மீது

தங்கிவரச்சோபிதமி லங்குவனைதப்பாரெனவி
டங்கர்சிவப்பேரமுத லிங்கரிடப்பால் விளம்பத்

தாயமுதவல்லி ஏயுமிடைமெல்லி
நேயமொடுபுல்லி வாயழகு சொல்லி

தநயரிவரிருவர் சகலவுயிருநனி
தழைய அருள்புரிவர் கவலையிலையெனலும்

தஞ்சமருவுஞ்சரணர் அங்கைகொட்டியார்க்கத்
செஞ்சடையிருந்தவொரு கங்கை எட்டிப்பார்க்க

தின்காளை வாகனமு டன்காளியேறிவரு
பொன்காம தேனுவும லங்காரவீதிவரச்

சண்டை சுரர்நிர்மால்யங்
கொண்டை தொடர்ந்தேதருதல்
கண்டே தந்தைகால்வெட்டித்
தொண்டே சிறந்தவிதந்

ஈர்சனர் மெச்சிட அற்புத கற்பக
நாடாளு மிந்த்ரா தியர்

உற்சவலட்சணம் இப்படிவைத்தவர்
ஈறுதி யன்பானவர்

தாமாகவந்தாரிணை நாமாஎனும்போதொலி
தகுந்தகுமென்றுதவி லூகந்தவோர்துந்துமியு
மதிர்ந்திடு ஜண்டை யொடு மிருந்து முழங்கவுபர்

தம்புருச்சங் கீதமுதிர் நாகசின்னம்பாட
அன்புருக்கந் தேடினவர் தாகமின்னந்தேடச்
சந்தி மகிழ் சரபத்தின் பேர்புனைந்த மாட்சி
சேர்ந்து முடி மலைமுத்துச் சாமிகண்டகாக்ஷி. (திரு)

## ஆசிரிய வண்ண விருத்தம்.

### சந்தக்குழிப்பு.

தத்தத்த தானதான தத்தத்த தானதான
தத்தத்த தானதான —தனதான.

பத்திப்பு ராணசிலர் இத்திப்பு நேர்கவிசர்
பட்சத்தி லேயெநாளும்—விலகாமே
பற்பட்ட வாய்கபோல மிச்சித்து வேசை மாதர்
பக்கத்தில் வீழ்வர்நேச—மணுகாமே
செத்திட்ட போதுமீகை வட்டிக்கு மேதளாத
சித்தத்து லோபர்வாசன்—மிதியாமே
செச்சைப்பு யாசலாதி பச்சைக்க லாபம்வேல்கோள்
செப்பத்தை யேழையேன்மு—னருள்வாயே
சத்தித்த மாநடேசர் நெற்றிக்கண் மீதிலேச
னித்துத்த டாகமேவி—வருபாலா
சஷ்டிப்ர தானநேம முற்றுப்பராவு தூயர்
தத்திற்ப டாதுவாழ்வு—பெறநேர்வாய்
முத்திக்கு மோய்விலாத சித்திக்கு மூலமாகி
முட்டைப்பி ரானுமான—குகவேளே
மொக்கிட்ட பூநலூரி லர்ச்சித்த கோபிஷீதி
முத்துக்கு மாரசாமி—முருகோனே.

வேறு சந்தக் குழிப்பு.

தனத்தத் தாத்தத் தானனதானன
தனத்தத் தாத்தத் தானனதானன
தனதத்த் தாத்தத் தானனதானன தனதானு

சிரித்துப் பார்த்துப் பார்வையி னுளுள
நெகிழ்த்துக் காட்டிச் சாடைக ளேபுரி
திருட்டுக கூட்டுக் காரிக ணரிகண்--மயலாலே

திகைத்துத் தீர்த்துப் பாடிய பாவலன்
மலைக்கட் கோட்டிற் போய்விழு போதெதிர்
தெரித்துக் காட்சிப் பேருரு நீதர--விலையோமேல்

விரித்துச் சாற்றக் கூடிய தேதிரு
வுளத்துக் கேற்றுக் கோரவி யாதிகள்
விலக்கிக் காத்துக் கீதவி னோதநற்--பாமாலை

விளக்கிச் சாத்திப் பேணிய நீபமொ
டமைத்துக் கீர்த்திக் கோரடை யாளமு
மிருக்கப் பூர்த்திச் சேவையை யோர்முறை--அருளாயோ

உரித்துப் போர்த்துத் தோலணி வார்மறை
யெழுத்தைக் கோத்துக் காலணி வார்அவை
ஒலிக்கக் கூத்துத் தானிடு வார்நுதல்--வருபாலா

உறிக்கட் டேக்குப் பால்தயிர் கோவியர்
மனைக்கட் பேர்த்துப் போனக நேர்பவ
னொருத்திக் காப்பட் டாடைசெய் மாயவன்—மருகோனே
அரித்தைப் பாட்டுக் கீரனை யேசிறை
பிடித்துப் போட்டுப் போனவன் மாமலை
யழித்துக் காக்கக் கூரயி லேவிடு—மதிதீரா
அடுத்துத் தோப்புக் கூவமெ லாமடி
யவர்க்குக் கோட்டிக் கானந லூரெனு
மருப்புக் கோட்டைக் கோபுர மேவிய—முருகோனே

வேறு சந்தக்கழிபபு.

தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தானதானே.

புருவமொன்றுந் திலகமுங்கண் பெருமுனந்தண் கமலநே
ரிருபதங்கும் பிடுதொழும்பின் புனிதர்சங்கம் புகுவதே
புகலுடம்பின் பயனெனுஞ்சங் கதிதெரிந்துந் தினமெலாம்
விருதாவே.

பொருள்விரும்புங் கனகுடும்பந் தொடர்தருஞ்சங் கடமதா
லலையுமென்றன் பிறகுவந்திங் கழுதுநெஞ்சுடன் புரிகுவார்
புடவையென்றுஞ் சரிகையென்றுங் கலநெலென்றுஞ் சிசு
விலா—மலடாவே

திருமணம்பின் பொருதரம்பெண் டருவதுண்டென் றிசைவதா
லதில்விளங்குஞ் செலவுநின்றன் புலமைபொங்குங் கொடையிலோர்
திறமையென்றும்பகர்வர் தஞ்சந்தடியிலங்கிங்குறுதிதேர்—மணதூடே

சிலபுகன்றுங் குடிதுலங்குங் கிரகமென்றும் புதியவா
பரணமென்றுஞ் சலிகையென்றும் பலவிலங்கங் களிலுமே
சிதையுமுன்பிங் கியையுமுன்றன் றெரிசனந்தந் தடிமைபா
லருளாயோ

தருணமங்குஞ் சிசுவண்மந்துங் குமரனென்றுந் திரைகள்சேர்
கிழவனென்றும் புதுமைதந்தன் னுருசெழும்பெண் கவுரிய
தாமுணர்ந்தின் புதவுதுங்கஞ் சிவமதங்கொண் டுளவெனு
வருவோனே

தருவர்முந்துஞ் செயமறிந்தன் றமரரின்பம் பழயவ
றுயரவெங்கண் புரிபுலிங்கஞ் சரவணந்துன் றிடவொர்சேய்
தருநலந்திண் புவிபுகழ்ந்தும் பரவியுய்ந்துங் குலவுமா—முதலோனே.

அருணையின்கண் பிரமனுந்தண் டுளவனும்பண் டெதிரிடா
முடியுடன்பொன் சரணுமெங்கென் றளவிடுஞ்செங் கனலதா
யதிசயந்தந் தருளிவந்தங் கொருபொயன்பங் கயனெனு
நவில்வோனே

அணிபுயங்கம் படமொடுங்குந் தலைகடொங்குந் தெரியலாய்
தமிழ்வழங்கும் பஜனையுஞ்சந் ததமுழங்குந் திருநலூ
ரமுதவிங்கஞ் சிவமயங்கொண் டுலகமெங்குந் துதிகொளோ
ரிறையோனே.

நேமமாப்பணி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு, தாளம்-சாப்பு.

தண்ணிகள்.

தேமிகுந்தமுத்து சாமிசெந்தமிழ்க்கு
தாரனே வருதிருநல் லூரனே ஜெய
வீரனேப் பச்சைம யூரனே முத்துக்கு
மாரனே அலங் காரனே.

நீமகிழ்ந்திருக்க லாமே முன்பு சொன்ன
நேரமே விதியுமற சாரமே இனி
நீக்குவேனே என்றன் வாக்கினாற் செய்யுப
காரமே இந்த நேரமே.

கந்தசெண்பகம்பொ ருந்துடம்பு கொண்ட
பாணியே குமரதண்ட பாணியே உன்னைக்
கண்டுகொண்ட பின்பு வந்திடும் பெயர்கல்
யாணியே மனம் பேணியே

சந்ததந்துலங்கு மிந்த இன்பு நம்பு
நேசமே சிறிதுமில்லை மோசமே மிகு
சாந்தமான விழி நேர்ந்த தேகந்திவ்யு
வாசமே கொள்ப்ர காசமே.

விருத்தம்.

என்னபிழை நான்செய்தி ருந்தாலு மன்னித்
திடும்படி யிறைஞ்சுகின்றேன்
எப்போது மென்மனதில் வைப்பாக நீவந்
திருக்கவே வேண்டுகின்றேன்
அன்னைதந் தையர்தம்மை நிந்திக்கு மூடரிடம்
அணுகாத விரதமொன்றும்
அடியேன் அனுஷ்டிக்க ஆவலுறுகின்றேன்
அதற்குமே லென்னசொல்வேன்
வன்னமிகு நடனமிட மயில்மேல் அலங்கார
மதுரமா ணிக்கமணியே
மாவுஞ் செழுந்தேனும் வள்ளிக் குறத்திதர
வாங்கிமகிழ் மணவாளனே
சின்னமாங் குயில்மதன் சேனையும் பூசனை
திருந்துதிரு நல்லூரில்வாழ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவேலனே.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஏகம்.

பல்லவி.

கருணை நீ புரிவாயே அடியேன்
கவலையுந் தெரிவாயே.

## அநுபல்லவி.

பிரணவ வேதா அரிமுதலோர் தாம்
பரவு திரு நல்லூர் நீதா
அருளினடேசர் அமுத லிங்கேசர்
அகமகிழ் குரு நாதா (கரு)

அநித்திய வாழ்விற் செனித்த வெம்மாயைக்
ககப்படா திருக்க வென்னெண்ணம்
உனைத்துதித்திடவே கினைப்பிக்காயானல்
உய்வதிங் கெவ்வண்ணம் (கரு)

உள்ளே பகையும் உதட்டிலே உறவும்
உள்ளபாசாங் கரைகூடித்
தெள்ளறி வழிந்தேன் செய்கையை மறந்தேன்
தீனன் எனைநாடி (கரு)

புவனத்தைச் சுற்றி ஒருவட்டம் நொடிக்குட்
போய்த்திரும்பின் மயில்வீரா
கவி முத்துசாமிமன மொக்கப்பேசும்
தார்யூரா னுசாரா (கரு)

வெள்ளமலையோத்த பலமேடை என்ற வர்னமெட்டு.

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

---

உடுமலையின் முத்துசாமி பாட்டை மகிழ்ந்
தோதிடுநல் லூாருப்புக் கோட்டை தனில்
உபருமமுதலிங்கர் குமரனருள்விளங்கு
முருகன் அரி மருகன்

கடகளிறு தாதன் குளத் தண்ணன் சடை
கட்டும் பால சந்திர முக் கண்ணன் மகிழ்
கந்தனென்ற தம்பினட னந்தருது ரங்கமயில்
வீரன் அலங் காரன்

காணவேணுங் காணவேணு மென்று நான்
காதல்கொண்டு நீதமுடன் சென்று நேர்
கண்டுதெரி சித்த பலன் மண்டையுள மட்டு மற
வேனே இனி நானே

பூணுமணித் தேர்வடத்தைத் தொட்டேன் அவன்
பொன்னடிகண் ணுன்னியேகும் பிட்டேன் அப்
போது கந்த வேலிருந்த சோதியென்சொல் வேன்மகிழ்ந்து
பேரானேன் அரு ளானேன்

சுத்தமிகு ரத்னமணி க்ரீடம் சிவ
சுப்ரமண்யன் அற்புதல லாடம் பெற்ற
சுகிர்தந் திலகந்திகழ் வதனங்க மலங்குறு
நகையே பொரு வகையே

வைத்த விரு பக்கமிரு பெண்கள் சாமி
வடிவம் பருகுமவர் கண்கள் அங்கு
வந்திருந்த தொண்டர்பந்தி முந்திநின்ற வெண்பசுந்து
நானே சொல்லு வேனே

விருத்தம்.

இன்ன மெத்தனைநாள் இருந்தாலு மொருநாள்
இறப்பதே சத்தியந்தான்
என்றெண்ணி யெண்ணிபான் உன்சந்நி திக்குவந்
திடுகின்ற முறையொன் றுமிகள்
புன்னகைப் பெண்மாயை தன்னிலே மனமது
புகுந்துகொள் ளாமலெங்கும்
பொய்வார்த்தை விள்ளாமல் ஐயமேற் பார்களைப்
போவென்று தள்ளாமல்வீண்
சொன்னகெரு வத்திலே துள்ளாமல் அபகீர்த்தி
சூழாம லுள்ளவரையுந்
தொண்டர்கீழ்த் தொண்டனுன்உன் கோயில் வலமாய்த்
துதித்திட விரும்புகின்றேன்

தென்னைமா பலவுமல் லிகைமுல்லை வர்க்கஞ்
செழித்ததிரு நல்லூரில்வாழ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவேலனே.

---

இராகம்—மோகனம்—தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஏறு தியே

ஈடேறும் வழித்திரு நீறு கொடுத்தருள் (ஏறு)
எத்திக்கினு மெச்சப்பகர் வெற்றிக்கொரு கட்கத்தொழில்
எதிரே நின்றதி சூரன்கதியால் வென்றதுபேசும் (ஏறு)
இன்பங்கொண்டென்றும் மின்பங்கண் டங்கு (ஏறு)
ஈன்றோர்புகழ் மேம்பாடுறு சான்றோர்குல வேந்தாகிய(ஏறு)

அநுபல்லவி.

காமேனார்கூடு மெம்பிரான்துன் பிரான் கதிசுப்மா தாரான்
நீநாடி நெக்குருகி நெக்குருகியுள்ளம்
தேனுகப்பெற்றாய் சிவானந்த வெள்ளம். (ஏறு)

சரணம்.

ஏற்றிவைத்துத்தானேறுத ஏணியைப்போலே
எவர்க்குஞ் சொல்லுமெவனெனக்கில்லைநெறி இக்குறையாலே
போற்றினேனுக்குப் பூதிசாதனம்
பூரணமாய்ச்சேரக் காரணசாதனம்
பூமிக்கிடை நிருமித்துத் தாமித்தைகள்விடுவித்து
தேமிக்கணிதமிழ்முத்துச் சாமிக்குதவியவஸ்து (எ)

விருத்தம்.

பூதவச மானைக் கிரன் கவிக்குப்
பொருப்பிடித் தாளவில்லையா
போய்உருவ மலையேறும் அருணகிரி முன்வந்து
புகழ்வரந் தரவுமில்லையா
கேதசுர மீனவன் சுகசரீ ரம்பெறக்
கிருபைசெய் செய்யவில்லையா
கிரணமுடி இந்திரன் பதவியும் பொலியக்
கிலேசந் தவிர்க்கவில்லையா
மூதறிவு தந்தெனைப் பாதுகாப் பதுமட்டு
முடியாத தோமுருகனே
முப்பத்து முக்கோடி தேவருங் கைதொழும்
முத்துக்கு மாரசாமி

சீதசந் திரபாத கணபதி சகோதரா
செழி திருநல் லூரில்வாழுஞ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவேலனே.

குடியிற் பிறந்த என்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி, தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

என்னபிழைப்பெனக் கென்னசிறிப்பெனக்
கென்னகுதிப்புப்பின் னென்னமதிப்பு
மன்னுநல் லூர்விடங்கா கிடைக்கரும்
பொன்னேய முதலிங்கா
மான்மழுவார் கான்மலர்க்கை
வான்முதலே வன்னியங்கண்ணுதலே

பூப்புக்குமரிகள் காப்புக்குடும்பப்போல்
லாப்புக்கு மென்னிழ் மாப்புக்கும்வந்த
மூப்புக்குங் காரணமாய் சுடலைத்
தீப்புக்கங் கேதாபிணமாய்
முடியுமுன்னே நெடிதருளி
அடிமைகொள்ள முன்வரக்கூடாதோ

நீர்க்கண்டகப்பிறின் சீர்க்கண்டர் போற்றிசெய்
மார்க்கண்டன்பத்தியும் மேற்கண்டறியேன்

காரக்கண்ட சுந்தரனே நம்பிக்கு
கோற்கண்ட ருப்பரனே
காமர்முத்து சாமிசித்த
மேமிகுத்த காருண்ய கங்காதரர் (என்)

தில்பரங்ஹி என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்.

பல்லவி.

ஆயிரங்கவி பாடினலு மதிலென்னபலனே. நான் (ஆ)

அநுபல்லவி.

அருளாட்சி மாட்சி யமையக்கண்டிலனே. (ஆ)

சரணங்கள்.

போயிரந்தே பலே யாதகிருத்திப்
பொருளுப தேசமொன்று
நாயிறந்தாற்போ லிறவாத முன்னமெஞ்
ஞானப்ர காசமொன்று
நண்ணுகிலேனே புண்யம் பண்ணுகிலேனே
நண்ணியசிவ புண்ணியர்மீச்சிலுண்ணுகிலேனே
நன்மையார்க்கும் எண்ணுகிலேனே (ஆ)

அண்டியகிரன் பொய்மொழிகிள்ளோ
அருணகிரி நாதன்
அகஸ்தியர்முத லெவர்க்கும் ப்ரணவ
மளித்தநன் னீதன்
அருப்புக்கோட்டையிலே நீ இருப்புக்காட்டையிலே
அல்லாமனுண்டோபின் எல்லோருமேதிரு
நல்லூரின் பாட்டையிலே
ஐக்யமுத்தி அமலம்நாட்டையிலே. (ஆ)

ஆனசகலர் அருட்குருவாலே
அடையுங் குருபரனே
ஆறுமுகங்கொண்டு சூரரைவாட்டி
அடும்பன் னிருகரனே
அந்தக்காரணமே அர விந்தச்சரணமே
ஆமயமறவுமெல்லமுத்து சாமிதருணமே
ஆக்குன் கீர்த்திக் கதுவுங்கிரணமே. (ஆ)

இஸ்கே பேகல்மேஹோமைன என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி.

நானிருப்பது திரு நல்லூரே தாது
நாடி யெனக்கொருவர் சொல்லாரே

அநுபல்லவி.

தேனிருக்குங்கடம் போமெருகுக்கிடம்
சேர்கொடி முத்துக்கு மாரசாமிதன்னிடம். (நா)

வண்டுகிளி யன்னம் உண்டு சொல்லமுன்னம்
கொண்டநெஞ்சந்தூது விண்டுவராமலின்னம் (நா)

முந்துமுடிமலை முத்துச்சாமிசொல்லை
பைந்தமிழ் கொள்ளும் பசுந்தோகை யாமெல்லை. (நா)

பொன்னுலவும் பன்னிருகைவேலா என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் ப்யாக், தாளம் ஆதி.

கண்ணிகள்.

ஓதிருநல் லூர்வளரோய் யாரா புகழ்
ஓராயிரம் ஆராய்வில காரா பால
உண்ணுமுலை கண்ணனகு மாரா இந்த
உலகவளவு மொருநொடிதனில் வலமிடவரு திடமருவிய
உக்ரரண விக்ரமம பூரா இம்ப
ரும்பரொலா நம்பியவு தாரா

சாதிமதச் சேதியில தீதா தமிழ்ச்
சந்தமெனில் முந்திமகிழ் காதா சிவ
சங்கரனும் பொங்ககவில் போதா முத்து

சாமிக்களி புடுமலையனை யேசித்திட வருள்புரிகிற
தங்கநிறத தண்கமலப் பாதா மனந்
தங்குநிறை கின்றவருள் தாதா.

பங்குவமா எற்குறுசி நேகம் உன்மேற்
பற்றினது முற்றியநல் யோகம் எண்ணம்
பத்திதனை நத்திடும்வை போகம் தந்து
பாவித்தரு ளேயித்ததி மேலிட்டிதம் வாசித்துளம்
பாடுவது மேமதுர பாகம் பழி
யோடவரும் பாடுக ளனேகம்.

முக்கியமோர் பேச்சுமிலை மூச்சும் இல்லை
மோசமொரு வேளையெனக் காய்ச்சும் சுரம்
மூண்டதுகா ணீண்டவிழிப் பாய்ச்சும் புனல்
முத்துக்கள்லெ டித்துச்சித றத்தக்கவொ ருக்ஷணத்தினில்
மூந்துவதோ சந்தனமாம் பூச்சு ஊற
றிந்திடவே வந்ததை யோ பாவச்சும்.

சித்தமதுள் வைத்திடும்வி சாரம் தனைச்
செப்பமன மொப்பலெவிவ வாரம் வாயிற்
செல்வதிலை எள்ளளவா காரம் நான்
செய்தவமதி லெப்படியகிளி வைததுபல நோய்தனைதரு
சீர்கெளாம் பார்வையிலின் நேரம் நீயே
தேர்வதுதான் சோருமுப காரம்.

## ஓரடி.

இராகம்—நாட்டை தாளம்,—ரூபகம்.

### பல்லவி.

விதரணகணபதி ததிவருவாய் நம்பினே னுந்தன்
பதமலர் நிதிகதி யதுதருவாய் (வி)

### அநுபல்லவி.

மதுரபக்ஷண வகையனந்தம்
வைத்துப்படைத்து வாழ்த்திவாழ்த்தித்
துதிசொல்லித்தலை தாழ்த்தித் தாழ்த்திச்
சுடுமனல் மெழுகென மனமுடை யடிமையி
னெதிர்வர வெனதடை சோதிக்காதே வாதிக்காதே ()

### சரணங்கள்.

தும்பிக்கையாலொருத்தி தன்னைத் தூக்கிக்கையிலிருத்தி
நம்பிக்கைதந்தசித்தி இந்த நானிலஞ் சொல்லும்நத்தி
நாகப்பதியிறை பெறுமொரு சோலைக்கும் புனல்
காகத்துரு வொடுதரவரு லீலைக்கும் மறை
நாலுக்கும் பொருளெனவதன் மேலுக்கும் பிரணவமெனும்
நீலச்சிந்து ரவதனசு சீலத்தைங்கர சிவசுத
நானுவித நீபுரி யாடலுக்கும் சாக்ஷிபலபல
தாமோதுவர் ஆலயம் நாடலுக்கும் எண்ணமற்றிருந்த

நாயடியேன் செந்தமிழா னன்பதமே பாட
நீயுதவும் பண்பதனல் அன்பர்கள் நேர்கூட
நாடகசம் பந்தமதே யெங்கணு நீநாட
ஞாபக மொன்றும்பெறுவேன் என்கலி நோயோட
நாட்டாமதமே செயல்வினை
யாட்டாநிதமே திருவருள்
கூட்டாயுதமே யுளததை
யோட்டாவிதமே னையா
நாமத்தியல் பெரு முத்துச்
சாமிக்கவிபுனை வஸ்து
நீமற்றிணையறு சித்து
நேமப்படிதெரி சித்து
நலம்பெறமிக அலங்கிர்தமுடன்
இளம்பிறைமுடி தலங்கிடவுயர்
நாற்புயா சலற்புதமா. (வி)

---

ஆயேசையா யென்ற வர்ண மெட்டு.

இராகம்-அபுரூபம். தாளம்-ஆதி.

பல்லவி-

என்னசொல்வேன் இருக்கின்றவிசாரம்
எல்லாந்தீர்ப்பு துன் பாரம் மிகு

அநுபல்லவி.

உன்னதமான வடிவேலா தெய்வ
பொன்னகர் போற்று மனுகூலா
உமாபதியின் பாலா
சமானமற்ற லோலா
உற்பவஞா னப்ரபலா சுப்ரண்யா கற்பகமே. (என்)

சரணங்கள்.

முன்னம் அருணகிரி நாதன் தமிழ்
சொன்ன சந்தத்திலேவி ஞேதன் என்று
முன் கைக்கிளி யாக்கி வைத்த
மூல மெல்லாம் நோக்கி நான்
முறையிட்டேன் குறைபட்டேன் மதிகெட்டேன் விதிவிட்டேன். (என்)

ஜீவகாருண்ய மெனக் கில்லே பல
பாவமுஞ்சூழ்ந்து கொண்ட தொல்லே ஐயா
சித்ரமயில் வீரா கவி
முத்துசாமி நேரா
தெரிசனமே தருவருநீ வரமகுரு தெரிகுவையே. (என்)

அள்ளி அள்ளிக்குடிக்கும் என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு, தாளம்.ஆதி.

## கண்ணிகள்.

சீர்த்தி மிகுந்ததிரு மூர்த்தியா மோரொரு
நேர்த்திகொண் டதைப் பார்த்திரு—நல்லோரொரு ()

உன்—கெருவ மொடுங்கி யருகிலிருந்து
பொருளுணர்ந்துகொ ளிருளும்நெஞ்சே. (சீர்)

காத்திருந்தசித்தரும் கண்வாசி யோகரும்
காயசித்திக்கு நத்தியே—மனம்பற்றியே (காய)

அந்தக்—கஞ்சிமலையில் வந்துகுகையில்
உஞ்சுதவம னந்தஞ்செய்கிறார் (சீர்)

மூன்றுகுணங்களிலும் தோன்றுமுன் சித்திரம்
மெய்முத்து சாமிமித்திரம்—உன்நற்றிறம் (மெ)

இந்த—முதலகினை ஆதியருளி
பாதுபுரிந்து மோதியழிக்கும் (சீர்)

தேன்தாரும் தாமரைமேல் யேன்றபாலாழிமேல்
திவ்பகைலாச வெற்புமேல்—பாலாழிமேல் (திவ்)

அம்—செஞ்சொ லணங்கி பொன்பெருமங்கை
அம்பிகையென்ற பெண்களுடனே (சீர்)

தாஜராஜ தாஜராஜ என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி. தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

வந்திவ்வேளை தந்தருள்வாய் மகிமையின் காக்ஷி---ஒளிர்
மாணிக்க மூக்குத்தி மண்டலம் பாணிக்கும் மதுரைமீனாக்ஷி
சந்ததந் திருமணை சுந்தரவாமன் தங்கியவோர் சூக்ஷி
தமனகமகிழ் மந்தார மல்லிகை சாரசமிரு வாக்ஷி [க்ஷி
தாளிலணிந்துகண் ணேர்பணிந்தாலவர் தமக்குண்டோ தா
சரப கவிப்பேர் மருவியமுத்து
சாமி மனோசாக்ஷி சாமி மனோசாக்ஷி சா. சாக்ஷி (வந்)

இராகம்-நோட் தாளம்-ஏகம்.

### கண்ணிகள்.

சர்வலோக சாக்ஷியே தாயேமீனாக்ஷியே
தாட்டீகமான தடாதகைப் பிராட்டியே
தாக்ஷிஒட்டியே காக்ஷி காட்டியே [வே
தாங்குவாய் திருண்மெலாந் திருவிளையாடிய மதுராபுரிதனி
தாமரஞ்சிதபுய சோமசுந்தரநய
தாரமாந் காரணி (சர்)

வங்கார மார்பிலணி என்ற வர்ன மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி, தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாராதி நாமகன ரூபவிப காரமிகு
மாயாமி லாசமிதி லேழ்மைத மாறிவெகு
பாடேப டாமலிது நாடகமெ னுவுள்வு—பகர்வாயே.

சீரான வாழ்வுபிணி தீருடல்கி லேசமது
ஞானபூ தியழி யாதபுகழ் பாடுதமிழ்
சேராவ லீகைபுனை வாகைவர மேயினிது—தருவாயே

போராடி ஓடிமறு காலனுகி மூடுநுதல்
நீறுன தேதெரிய நேரிலதி சூரன்வரு
போதாதி தேவசிவ நேசமன மானலய—வசையாலே

ஏரார்கை லாசபதி ஜோதிவடி வோடுறைய
மாதார காதிருந லூரடியர் பூசைமகிழ்
ஏனாதி நாதசுக போதவுசி தாநியம—நெறியோனே

கலித்துறை.

மூனந்தவ சீலர் மொழிதீர்த்த யாத்திரை மூர்த்திதெரி
சனந்தல வாச மிவைவே றனுட்டிக்கச் சத்தியுண்டோ
தினந்தமி யேனுனை யே நம்பினேன்வினை தீர்புகழ்தற்
கனந்தனு மேமயங் கும்பழ னுபுரீ யாண்டவனே.

தையலே சையோகம் என்ற வர்ணமெட்டு.

இராகம் மோகனம்–தாளம் ஆதி.

பல்லவி.

எந்தவிதந்தனி ஆந்துணைதந்தாள
ஏனோவின்னந் தாமதம் சரி
தோனேவர்மமே நிதம் (எந்)

அநுபல்லவி.

விந்தை தருஞ்சித்தி வித்தக னேசத்தி
வேலா சுசீலா மறைமூலா அநுகூலா
வேடிச்சி நன்னேசனே களாம்
பாடிக்கு மரேசனே. (எந்)

சரணங்கள்.

நானிங் கொருபாவி நானுந் துயர்மேவி
நைந்தேன் கரைந்தேன் சிதைந்தேன் இலேயுய்ந்தேன்
நம்பிமோ சமாகுமா பழி
யும்பின்வீ ணேபோகுமா (எந்)

தொண்டர்க ளேற்றம் சொல்லும் புவிதோற்றம்
சூதோ பிராதோ பின்னேதோ என்பால்வாதோ
தோகைம யில்வாகனு முரு
காகுஞ்க ரிமோகனு (எந்)

போத குருநாதா புலவர்க் கொருதாதா
புண்யா காருண்யா லாவண்யா சுப்ரமண்யா
பூமிபு கழ் யோகனே முத்து
சாமித மிழ்த்யாகனே. (என்)

இராகம் பிலஹரி—தாளம் சாப்பு.

பல்லவி.

என்னகேள்விமுறை இல்லையோசாமி பராமுகமிதில் (என்

அநுபல்லவி.

பொன்மா மயூரப்ர சன்னு பழநிமன்னு என்னையா (என்)

சரணம்.

பூமியெல்லாந்தொழ வேமிகுந்தாய் சிவ
காமி சுதாமுத்து சாமி சதாநத்தும்
பூம்பாது கடனும்பா துகாக்க வீம்பா பின்னிதில். (என்)

தொடும்பத் திநெறி குடும்பத் தில்வளர்
கெடும்புத் தியாலே விடும்பித் தன்யானே
துயரமே நித்தம் உயரநான் சித்தம் அயரவேவிட்டாய்(என்

தீராத சஞ்சலம் போராட நானுன் முன்
சீராட நீயருள் கூராதிருப்பது
சீலமோவனு கூலமோகவி காலமோ விது (என்)

## வண்ணச் சந்தம்.

### இராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ரூபகம்.

களிசிறந்திடு பெண்களின்ப மெலாம் நுகர்ந் தனன்
குடிதொ டர்ந்து மயங்கினன் துரைமார் விருந் துடன்
கண்ட நாடக சங்கமோகன
டம்பர் வீணர்ப ணம்பெறுதவர்
காலடிக்குரு மோடிவிழுந்தனன்
நூல்படித்தும்வி வேகமுணர்ந்திலன்
சிரஞ்சீவி யாயிருக்க நேருமோ.

ஒளி மழுங்கிய கண்கள் வந்தபினே முனந் தினந்
திரியு மந்த விடந்தொறும் பலபேர் இவன் கெடும்
பண்புபாரென நிந்தைபேசவு
டன்கையாதர வொன்று தேடுமென்
வாழ்வினைப்பயன் மாமன் மகிழ்ந்துபெண்
ணை கொடுப்பது மேது என்புறம்
பரஞ்சோதி ஞானநிட்டை சேருமோ.

குளிர்க ருங்கட லுண்டகும்பனுமே தருஞ் சதுர்
முகனுமிஞ்சிய சந்த வண்டமிழோ திடுஞ் சுகம்
கொண்ட மாணுரு வொன்றி னுனும
றிந்த தாரக மந்த்ரமாலிகை

கூறி யப்பனை மீறியி ருந்தவ
யோகர்சித்தர் சகாயம் விரும்புழி
வருஞ்சேயு மானமுத்து சாமியே.

தளிமகந்த கடம்பணிந்தவனே புனம் புகுங்
குறமடந்தை யிடம்பணிந்தவனே தகுந் தகுந்
தந்தனதன என்று மாமயி
லுந்து மாடல்வி ளங்குலாவர
தா திருப்பழ னிபுரிநின்றவ
போரிடத்துணி தானவர் அந்தக
உரஞ்சாலு மாதிசத்தி வேலனே.

## வேறு வண்ணச் சந்தம்.

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.

ஆரணப்ர சித்த சுத்த மோனவித்த கத்த வத்த
ஆதிநித்ய சத்தியத்த வாகமத்தி நிச்ச யித்த
வனப்பிறை கங்கையறு குவபமொட ணிந்தசடை
யருக்கொரு மைந்தருயர் வனப்புமி குந்தபர
ரேகவடி வாயுலக மேவுயிரெ
லாமுறையு நாதசுக போதசுகிர்
தப்பரமசீலர்.

மாதவத்த ருக்கு மிக்க சாதனத்தி ருக்கு முக்ய
மாமறைப்பொ ருட்கு றித்த சீதநத்தி னத்த னித்தன்

அரக்கரை வென்றுறுசு ரருக்கரு டந்துமிக
விருப்பொடு வந்துகட லினைக்கடைந் தன்பினமு
தாவலக மேவியுண வேதருத
யாளர்மரு கோமனைவல்லாவுகரு
ணைக்குணவிசாலர்.

போதகத்த னுக்கிருக்கி மீதகத்தி ருக்கு வைக்க
வாதகத்தி ருக்கு மெய்க்க வோதுகத்த ரெத்த லத்து
மிருப்பவ ரென்பிழைகள் பொறுப்பவ ரன்பாக
மினிப்பவ ரங்குவிசந் தரிப்பவ னுந்தகைப
தேவரும் யாவரும னுதிபர
நாதனென வோதவளர் நீதருமை
முத்தமிழ்பாலர், திருவேரகமதிலமராவலார்.

ஆலமொத்த கட்குறத்தி பாலுவப்பு வைத்து நத்தி
மாதினைப்பு னத்தடுத்து சாலவித்தை யைப்படித்து
வணக்கமு டனபணிய வணக்கமொ டன்பணிய
மொழிச்சர சம்பணிய வளப்பரு மிங்கிதவு
தாரபரி பூரணசு கோதயவி
லாசகும ரேசமுரு கேசருயர்
நித்தியவினோதர்.

பாதகத்த ரச்சமற்ற சூதகத்த ரிச்சைமிக்கு
பாதலத்தொ டெத்தலத்து மீதுமுற்ற ருத்திவைத்த

ரசைப்புரி யுங்கொடியர் வசைப்பழி யெங்குமுற
வசைப்புக ழென்பதற வொறுக்கும கங்கைகொடு
தேவரகம் வாதையுற வேசிறைசெய்
சூரரூர மாயவடி வேரற வெய்
சத்தி வடி வேலர்

வேதவித்தன் மத்த கத்து மாமுகத்த னித்த யத்தன்
போதகத்தி ருக்கு மிக்க மாமகட்க ருத்தன் முற்றி
யுருத்திகழ் நிம்பகிழ றிருத்தளி கொண்டபரன்
ஒருத்தன்ம னங்கனியவ் வனத்தழ கின்பமிகு
சோதரவி னோதநவ நீதகுரு
சாமியெம தாதரவ தாகவரு
முத்தம குணாளர், செகமாதி தொழுதகைய காவலார்.

வாரணத்தை வித்த ரித்த கேதனத்தர் வற்பு றுத்தி
மாமரத்தை மற்று திக்க பூதரத்தை யுக்க விட்ட
வயிற்கர ரஞ்சலிசெ யுயிர்க்கரு ளின்புறுசை
வருக்குய ரன்பரக மிருக்குந ரந்தமயி
லேறிவிளை யாடுமெழி லேயிலகு
பாலகும ராதிபதி யாகவளர்
முத்திதருநாதர்.

சாகரத்தி டத்தொ ளித்த சூதரைத் தொலைத்த ளித்த
மாதிரப்பு யத்தர் நித்...

எமக்கொரு நண்பரென விருப்பவர் சிந்தைமிசை
யிருப்பவர் சந்தமும் விருப்பவர் சிந்தைமிசை
ராகவுயர் போகமதி யோகமும்வி
வேகமுமெ மாவலக மேவுவகண்
டேற்றருளு நேயர்.

மாதரத்த நற்ற ரத்த மாதிரத்தி ருத்துசித்த
மாய்கையற்று நற்றவந்தி லேமகத்து வத்தை யுற்ற
வகத்திய னின்புறமெய் யகத்தியல் கண்டுதமி
ழகத்திய மும்பலவு மிதத்திய லுங்கருணை
நாடியுப தேசமுறை யேயுரைசெய்
யாததிரு நாதசிவ சோதியுரு
விற்றிகழ்ச காயர்: சரணகதி யருளு முதாரனர்

மாதொருத்தி பத்தியிற்சொன் மாதவப்பெ யர்க்குறித்து
வாதிழைத்த புத்தி யற்ற பாதகற்கு வெட்க முற்று
காத்தைய ரிந்தகண வனுக்கும னம்பதறி
வெருக்கொள வந்தவள்கை யுருக்கொள நன்குதவி
நீடுமருள் சாடியரு ளோடியருள்
வீடமரு மாடிலகு தேடருமு
தற்பொருள் விதானர்.

ஓது முத்த மத்த வத்தர் சேவையிற்றி னத்து நத்தி
யேது முற்ற வித்தை கற்று நீதகற்று சித்த மற்ற

வெனக்கும னங்கசிப வருட்டமீ றின்பநிதி
விருப்பொடு தந்துவகை யிருப்பவு வந்தெனது
பாவிலதி மோகமுற வேகொள்கரு
ணாகரகு கேசபவ நாசவரு
ணக்கமலபாதர்

வானகத்தி ருக்கு மொப்பில் கோன்மகப் பிடிக்கு முத்த
மெமகிழ்ச்சி யிற்கொடுத்து கானகக்கு றத்தி சொர்க்க
மலைக்குமி குங்கவன மிகக்கொடு வந்துமர
மெனத்தனி நின்றுபல சொலிக்கொளு மன்புளவர்
ஓதரிய தானவள மேவுசம
ராபுரீயி லேவளர்கு மாரகுரு
பத்தரகம் வாழ்வார், தவர்மேவு குடிலைவரை மீதிலே.

## வேறு சந்தம்.

இராகம் புன்னாகவராளி—தாளம் சாப்பு.

பூதரவம்புயனூர் தொழும் பூதரவும்புயனூர் மயில்
போலவேனலின் காவலார்மினை
யாளவேனலின் காவலார்சிவ
போதவரம்புடையார் சடை மீதமரம்புடையார் சுதர்
போகமேவுமி னவலார்கலை
யாவுமேபோதுமி னவலார்சுரர்
பூசிதசுந்தரனூர் அடி யார்பரசுந்தரனூர் அதி

போதகாதிப ஞதியார்பாஞ்
சோதியாயவ ஞதியார்
தாரஞர் அருள்புரியு தாரஞர்

பூமின்வணங்குகையார் வள்ளி யானவணங்குகையார் திகழ்
பூதமாதிய தாயிஞரறு
மீனுமாமகிழ் தாயிஞரருள்
வேதநெடுங்கடலார் அசு ரேசனடுங்கடலார் மயின்
மீதுலாவிய வேகஞருயிர்
யாவுமேவிய வேகஞர்துதி
ஓதுவர்சங்கமுளார் படு பாதகர்சங்கமுளார் தினம்
ஓதநீடிய வாரியார்கரு
வாதிலார்புகழ் வாரியார்
சாரியார் கயவரைவி சாரியார்.

தீதகலம்பரமே வன மானயிலம்பரமே விழி
சேருமான்மக வாசையார்துதி
கூரநாடிய வாசையாரொடு
வேலிநெடும்படையார் இனி மேலிலேனும்படையார் கனல்
வேய்கணேறிய பாலஞரனு
கூலராகிய பாலஞர்வளர்
காரணகந்தரஞர் குரு வாயுறுகந்தரஞர் உயிர்
காதுதீதுன காலஞர்பய

மேவராதுசெய் காலனர்
மாரனர் புகழுயர்கு மாரனர்.

சேயரியம்பரியார் சுதர் தியரியம்பரியார் செக
மாதிதேடிய மாலையார்மது
நீபநீடிய மாலையார்திரு
வாமயிலம்பதியார் கரு வாமயிலம்பதியார் கவி
வாணராதிப ராயினர்நிரு
வாணராதிப ராயினரிகல்
மாசமரம்புரியார் எழின் மாசமரம்புரியார் மலை
வாயுளார்மிகு வாயுளார்மயல்
வாயுளார்வரு வாயுளார்
மாலையே கொளவெனது மாலையே.

வேறு சந்தம்.

குருதேசிகனர் சிவசுப் பிரமணிக்கு
விலைநா மெனவே தமிழிற் கவிதொடுக்கு
மருமைப் புலவர்சித்த மலரிற் றினநடிக்கு
மிருபொற் கழல்படைத்த பெருமைக்குமாரர்
கருணா கரவேள் பொதியக் கிரியிலுற்ற
குருமா முனிபா லருண்மெய்ப் பொருளையொப்பி
லொருகைக் கிளியினுக்கு முதவிப் புகழ்பொறுத்த
கருணைக் கடல்படைக்கை பெருசுத்தவீர

குலமீசை கரனார் சகுணக் கடவுளர்க்கு
ஞுபர்சீ ருடையார் தனிநிட் களவிருப்ப
மருளிற் றருமொருத்தர் முதன்மைக் கடவுள்செட்டி
மனையிற் குளுமுதித்த புனிதக்குணாளர்
அயிலதனு மலர்க்களத்தை வெல்லுவார்.

கொலைவே ரறவே கருதித் தவமியற்று
மவர்பா லணிமா மயிலிற் றிகழ்சிறுக்கர்
புலமைத் திறன்மிகுக்கு—மொருபத் தன்வசமற்று
வெருளச் செயலகைக்கோ—ரெமனனுத்த பாலர்
அருணா புரியா லயவட்ட மதிலுக்குண்
மனையா டனையோர் தவசிக் குதவுபத்த
னதுகைப் பொருண்முடித்த—சிகரிக் குவடபக்க
மொருசொற் பகருநித்த—ருலகச் சகாயர்
குளிர்தா மரையா கியதொட்டி லதனுக்கு
ளொருசே யெனவா வியலுற்ற முருகப்பர்
தருணத்தி லெமதிச்சை—வழிநிற்கு முபர்சித்தர்
பொருகுக்கு டமுழக்க—மலிவுற்ற தோளர்
அடியவர் வாய்மையைக் கருத்திலுள்ளுவார்
திருநீ றணியா தவரைக் கருவிமிக்க
மதுரா புரியூர் வழுதிக் கருள்கொடுத்த
கலையுற் றவனைமெச்சு—மவருக் கினியசட்டி,

விரதத் தினர்கருத்து முடியச் செய்தேவர்
துணிவே வடிவா கியசத்தி யமதுற்ற
கவுமா ரரையோர் கொதுகிற் கருதுநர்க்கு

நிலைகெட் டறிவுகெட்டு—வழிகெட் டழகுகெட்டு
விழிகெட் டலையுநட்ட—முறவிட்ட வேடர்

திரையா ழியல்வா ழுவுணக்கருவறுத்தி
பெருமா ணெடுமால் விழிபெற்ற மகளிர்க்கொ

ருரிமைக் கணவர்பற்பல—கனவிற் பல் வடிவத்தொ
டொளிர்சத்தி பெருமிட்டர்—மலையுச்சியாளர்

செயிராறு சீர்தொடுத்து மெத்த நல்குவார்

சினைமா முகில்சேர் பொழிலிற் றினைவிளைக்குண்
மயில்போல் வருவார் மயன்முற்றி யவர்செப்பு

மொழியிற்ப ரதவித்து—விழியிற்சு ழல்வதுற்று
வலியத் தொழுதிரக்கும்—விடர்சுற்று சாரல்

வளமே விடலா லிமயக் கிரியும் வெட்க
வடமே ருவைநேர் சொலநிற்கு மெழில் பெற்று

முனிவர்க்கு மமரர்க்கு—முரகர்க்கு மனிதர்க்கு
மிவரொக்கு மெவருக்கு—முயிரொத்து நீடு

செயமேலோ டொருமா நதிமத் தியிலெனக்கு
மொருநா ளொருபே ரறிவுற் றிடவுணர்த்தி

மலயக் கிரியினுக்கு—மகள்பெற்ற மகவிவாத்து
முதிர்சொற்ப னுவல்கட்கு—மிகவிச்சையான
திருவுரு மாமலைக்கடுத்த நெல்லையாய்.

---

இராகம் நோட், தாளம் ருபகம்.
கண்ணிகள்.

மாதுமாக மானவா வானவா வந்தனம்
மாமறை புகழ் சொலும் மாசிலாத தாயகா
வாகா சிற்பரா தற்பரா வாமனோகரா

வடிவனிலா சிறிபநிலா
மதிபுனைவாய் நதிவனைவாய்
மார நீறுடியோய் மாலயன் தேடியோய்
மங்களா சங்கரா (மா)

கானமேவு ரஞ்சிதா கந்தமேவ அின்பிதா
காலனைவிழ மோதுங் கருணைகரா சிவா
கான மேற்றவா நீற்றவா கட்கடாக்ஷவா

கரியுரியாய் அரியறியாய்
நரிபரியாய் வரவிடுவாய்
கால்கழுங் கூரா கங்கணம் பூணரா
காரணா ஆரணா (மா)

---

# இராம நாடகம்.

ஸ்ரீராமர் வனஞ் செல்லும் சமயம் சீதாபிராட்டியிடம்

கலித்துறை.

படுக்கைமண் ணாதும் உணவு கிழங்கு பழஞ்சருகே
அடுக்கு மிடங்கள் நடக்கவொண் ணாதமுள் ளாகுமங்கே
தொடுக்கு மிருகசஞ் சாரம் பயந்தருந் துன்பமெத்தக்
கொடுக்கும்பெண் ணேவன வாச முனக்கனு கூலமன்றே.

சீதாபிராட்டி ஸ்ரீராமரிடம்

கலித்துறை.

கோலா கலம்புரி கோதண்ட வீரன் குலாவி யென்னை
மேலான கண்வைத்துப் பாராத நாளென் விதிவசமா
பாலா பழமா பகர்சீனி யாநல்ல பாயசமா
ஏலா தெவையுநின் மேலாசை கொண்ட விளங்கொடிக்கே.

---

ஸ்ரீராமர் வனஞ்சென்றதைப் பற்றி பரதன் தன் தாய் கை
கேசியைக் கோபித்தல்.

இராகம் பியாகு தாளம் சாப்பு.

பல்லவி.

நாயகனைக் கொன்றுயடி
காரியல்ல பேயடி

71134

அநுபல்லவி.

மாயவஞ்சகி யாகிராமனை
வனத்துக்கனுப்பி மனுச்சக்கிரவர்த்தி (நா)

சரணங்கள்.

குலத்துக்கு முதல் மகனிருக்கையில்
குறித்தாயோ பட்டம் எனக்கு நீ
நிலத்திற் பழியை விளைத்துக் கெடுத்த
நீலிகெட்டஜெக ஜாலிஎட்டியிரு (நாய)

அண்ணன் காய்கனி யுண்ணவும் நாம்
அமுதவிருந்து பண்ணவும்
எண்ணுமாசாக்ஷி யினிநமச்குமா
இப்புவி யென்புய மோப்பிச் சுமக்குயா (நாய)

சீதாபிராட்டி வனக்காக்ஷி.

பலமகளுலோட்டி என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

அதிசயமனேகம் ஆமாம் அனுமந்த வனவாசம்
இதிலுலாவி இன்பந்தாவீ எப்போதும் வாழ்வோம் மேவீ
இருகண்ணும் சாக்ஷி என்னெனனகாக்ஷி
இந்திரபோக மிரீலுந்தாக்ஷி யல்லவோ

இதிலுந்தாக்ஷி யல்லவோ
(ப்ராணபதி) ஈடிதற்கு சொல்லவோ
ஏதே தீடிதற்குச் சொல்லவோ. (அ)

---

சித்ரகூட பர்வதத்திலிருந்த இராமர் முதலானோர்களிடம்
சக்ரவர்த்தி உயிர் துறந்தாரென பரதன்வந்து சொல்ல

இராமர் புலம்பல்.

விருத்தம்.

அருமைபா யென்னை வளர்த்திய காதல்
அப்பனே சக்ரவர்த்தியுஉன்
திருமுகங் காணச்சில தினங் கழித்துச்
சேருவேன் வனம்வந்தபோது
பெருதுவாஞ் சையினு லுன்னுயிர் போகப்
பெரும்பத வியைஅடைந்தனையோ
தருவிதிக் கென்ன செய்குவே னடியேன்
சஞ்சலந் தீர்த்திட லரிதே.

---

கண்ணாபிரம் படைத்த என்ற வர்னமெட்டு.

இராகம் கமாசு-தாளம் ஆதி.

கண்ணிகள்.

மெய்யே எந்தனைப்பெற்ற ஐயா அம்புவியுற்ற
விமரிசை முற்றிலுமகலவிடுத்துநீ சென்றாயோ விண்
ணமரர் துதித்திடு பதவி கிடைத்திட நின்றாயோ

ஐயோ கொண்ட நினைப்புப் பொய்யோ என்னபிழைப்பு
பூரணமாய் நிறை வேறிவராமலே போனதே என்
னாரண்ய வாசமோர் காரணம்போலவு மானதே

காட்டுக் கெனையனுப்பிப் போட்டு நினைவுதப்பி
கதிபெறவுற்றதும்விதியின்மகத்துவமேநேர்த்தியேமத
கரியுணு மாவிளங் கனியந்தை யொத்தது சீர்த்தியே

நாட்டிலிருந்துனக்கு மேட்டிமை மைந்தினிட்டே
கவில்கருமத் தொழில் பொலியநடத்தவு மில்லையே பிள்ளை
உதவி கொடுக்கிலேயெனவசைவைப்பதுதொல்லையே

---

சித்ரகூட பர்வதத்திலிருந்த ஸ்ரீராமரை பரதன் அயோத்தி
நகருக்குப் பட்டங்கட்டிக்கொள்ள அழைத்தல்.

குடியிற் பிறந்த குயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம் - பியாகு, தாளம் ரூபகம்.

## கண்ணிகள்.

பட்டா பிஷேகத்தை விட்டுவிலக்கியோர்
கட்டாயத் தென்தாய்து ரத்திய காட்டில்
பட்டத்துத் தேவியுடன் தம்பியாம்
லக்ஷ்மண ஞவியுடன்

பாதகந்திர் மாதவஞ்செய்
பாதங்கண்டு பண்ணுவேன் விண்ணப்பமே.

கட்டாகக் கேட்டுக்க டாக்ஷிக்கவேணுமோர்
காலப்பிசகென்று யோசித்திடாமல்
எட்டிய யோத்திவந்து பட்டத்தைக்
கட்டிக் கொண்டுபசுந்து

காக்ஷியீவாய் குக்ஷிபர
சாக்ஷியாளா கற்பக மாணிக்கமே.

தாய்வரமா அது வாய்வருமா சற்றே
ஆய்வது செய்துபின் மாய்வது நன்றென்
நேயுன்னை நானடுத்தேன் ராமண்ணு
தேயம தைவிடுத்தேன்

எகிட்டினே த்ரோகி நானே
ஆகினேனே என்செய்வேனிவ் விதிக்கே.

## விருத்தம்.

நீதிக்கு விரோதமாக நின்றுநான் பட்டங் கொள்ளேன்[ன்
ஆதித்தன் குலத்தார்கண்முன் அயோத்தியிலிருக்கமாட்டே

சாதிப்பாய்நானுங்காட்டில்தவக்கோலம்பெறுவேனண்ணா
போதிக்க வேண்டாம்போதும் போதும்யான் பெற்றபேரே.

---

வேண்டினேன் சையோகமே என்ற வர்ணமெட்டு.

இராகம் மோகனம்—தாளம் ஏகம்.

## கண்ணிகள்.

(ராமர்) தந்தையிட்ட கட்டளை தாய்வரத்தையொட்டியே
வந்துபட்டங்கட்டியே வாழ்வதற்கோ ரட்டியே

(பரதன்) அட்டியில்லை யண்ணாஅண்ணா அப்படி மனத்திலெண்ணாக்
கெட்டியாய் வந்துசூடுங் க்ரீடங்காணாக் கண்ணோர் கண்ணா

(ராமர்) கண்ணாமென் சகோதரா கசியுமன்புப் பரதனே
எண்ணுமன விநோதரா யிருந்தோமோநா மிதில்முனே

(பரதன்) முன்னே யிருந்தாசர் முறைதவறிடாநரேசர்
இன்னாளி னென்சென்மத்தை ஏசிப்பேசுவாரேநேசர்

---

திருப்புகழ்ச் சந்தம் - இராமர் சொல்.

## கண்ணிகள்.

முந்துபதி னாலுவரு டம்போன பின்புநகர்
வந்துமகு டாதிபதி யென்றேயி ருந்துனது
முன்சகல தேசமன்ன ரும்பேண நன்கரசு—புரிவேனே

பரதன் சொல்.

தந்திரிகை கேசிமக னந்தோக வந்தரசு
கொண்டிரகு ராமனைவ னம்போக வுஞ்செய்தது
சந்ததமு நீடுபழி யென்றேச னங்கள்சொல—வளர்வேனே

---

தென்னை கமுகு குலை என்ற வர்னமெட்டு
இராகம் நாதநாமக்கிரியை, தாளம் ஏகம்.

கண்ணிகள்.

தாயாரிடஞ்சொல்லிச் சண்டாளன் பரதன்
தந்தையிடத்தில் வரம்வாங்கி
கோயிலயோத்தியில் கொலுக்கொண்டானெனக்
குவலயஞ் சொல்லும் பழியோங்கி. (தா)

கேடுவிளைத்தகை கேசித்தாய்முகம்
நாடிநான்விழிக்க மாட்டேன்
கூடவருவேனண்ணா குடும்பச்சனியனொரு
கூனிகோளிதுசொல்லிப் போட்டேன். (தா)

ஸ்ரீராமர் பரதனுக்குச் சமாதானம்.
இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

பல்லவி.

தம்பிபரதா சொல்லச்
சற்றுகினு நின்மேல் குற்றமிருக்கிறதா (தம்)

அநுபல்லவி.

இன்பதுன்பங்களெல்லா மிந்தமனேசிருஷ்டி
எந்தக்காரியத்திற்கும் தந்தைதாய்சொல்லனுஷ்டி
பின்பதிற் கீர்த்தியுண்டு பிள்ளைகளால்வட்டி
பெரும்பொருட்பாக்கியமாகுந் திரும்பித்திரும்பிக்கொட்டி

பேசுகிறாய் புகழ்சேர்தாயாரை
ஏசுகிறாய் மகிடாதிபத்யங்
கூசுகிறாய் விழிநீராலென்னைப்
பூசுகிறாய் அடா (தம்)

—

பரதன் விருத்தம்.

தாமரைப் பாதங் கொண்டு தரித்தபா துகையா னாலும்
நேமமா யடியேனுக்கு நேரமீ தருளல் வேண்டும்
ஆமதை வைத்து நான்சிம் மாசனத் தருகே நின்று
மாமனு நீதிப் பூசை வழங்குவேன் அண்ணா அண்ணா.

ஸ்ரீராமர் பரதனுக்குப் பாதுகை தரல்.

இராகம் தேசிக தோடி, தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

தருகிறேனிதில் தடையில்லையிங்கே
தங்கிடாமலே செல்லுவாய்

அநமையானநம் அயோத்திச் குடிகளுக்
கதிகதைரியஞ் சொல்லுவாய்

பரதன் சொல்.

சொல்லுவேன் தாருஞ் சோதிப் பாதுகைத்
துணைகண்டாலுண்டோ துக்கமே
எல்லையிசேழு வருஷமானபின்
இருக்கவேணும்நான் பக்கமே

ஸ்ரீராமர் சொல்.

பக்கநேர்தம்பி பரதனேபந்தப்
பருவத்திற்பட்டஞ் சேருவேன்

பரதன் சொல்.

மெய்க்கவேவாரா விட்டாலக்கினி
விழுவேன்வரக் கோருவேன்.

---

பரதன் திருப்பாதுகையைச் சென்னியில் வைத்துக்கொண்டு தன்னுடன் வந்தோருடன் நந்திக்கிராமத்துக்குப் புறப்பட்டு வருதல்.

இராகம் ஆரபி, தாளம் ஆதி.

பல்லவி

பாதுகையே நல
பாகதிதருவதும் அரசிதுபுரிவதும் (பாது)

அநுபல்லவி.

சீதையுடனே சித்ர கூடத்தில்வந்த
ஜெயரகுபதிபதி தபமொடுதந்த (பாது)

சரணங்கள்

ஓதுமுலகிலெனக் கிலையபவாதம்
ஓடிவந்தேனைய னேகங்காதம்
வேதாகசிபம் விளங்குவினோதம்
மேலெனக்கினியென்ன வேணும்ப்ரசாதம் (பாது)

அண்ணனிருக்கத்தம்பி யாளாரசாக்ஷி
ஆகாதாகா ததுவெகுதாக்ஷி
உண்மையென்தாய்மன மொப்பிடுஞ்சாக்ஷி
உலகிலெவரெவர்க்கும் விலகாதகாக்ஷி (பாது)

ஏக்கமறப்பெற்றேன் இதுசித்ரகூடம்
சரோருகுமுண்டோ இதினுப்விசேடம்
நாற்கவிமணிமுத்து சாமிதன்பாடம்
நாடறிந்திடவேநான் சூடுங்கிரீடம். (பாது)

---

நந்திக்கிராமத்தில் ஸ்ரீராமர் பாதுகையை

பரதன் பூஜித்தல்.

**இராகம் இந்துஸ்தான் தோடி, தாளம் ரூபகம்.**

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீசகுநாயகன்பா | துகைக்காக்ஷி | |
| பாதுகைக்காக்ஷி | எதினித்தாக்ஷி | (ஸ்ரீ) |
| தீக்கினென்தாய்செய் | பாக்குசகாயம் | |
| ஓங்கியநேயம் | தாங்குமுபாயம் | (ஸ்ரீ) |
| கொத்தலர்சாத்தி | பெச்சுவன்எத்தி | |
| சித்தியயோத்தி | நத்தியநேர்த்தி | (ஸ்ரீ) |
| பந்தனராமம் | சிந்தையின்க்ஷேமம் | |
| நந்திகிராமம் | முந்தியநேமம் | (ஸ்ரீ) |
| சாபவிசேடம் | தங்கியபாடம் | |
| பாதகிரீடம் | பாக்கியபீடம். | (ஸ்ரீ) |

---

இராமர் சீதை லக்ஷ்மணர் மானைக்கண்டு தர்க்கம்.

இராகம் மால் கோஸ், தாளம் ஆதி.

கண்ணிகள்.

(சீதை) மேனியெல்லாம் வெள்ளியே
விளங்குகின்ற புள்ளியே ஒரு
மானிங்கே தோவந்து விளையாடுந் துள்ளியே

(ராமர்) நானிது வரைகண்டதே இல்லை கண்ணே
நானிது வரைகண்டதே இல்லை

நல்லபொன் வண்ணம்
நமக்குமே எண்ணம்

(லக்ஷ்மணர்) நம்பிக் கொண்டு நம்பிக் கொண்டு
நைந்திறந்தன்ன செய்கையிலேயிது
பொய்புருவர் திண்ணம்

(சீதை) பொய்யென்றவுன் நம்பிக்கை
புகலவேண்டாம் நம்பிக்கை
பையப்பற்ற வேணும் சென்றுகையில் வேடிக்கை

(இராமர்) அடி தையலே நான் தருவேன் பற்றியே
தடத்தில் சுற்றியே நல்ல
தந்திர முற்றியே

(லக்ஷ்ம) அண்ணாகேளும் அண்ணாகேளும்
தந்திரமாகவே சிந்தை யறிந்திட
வந்தமாரீ சனிவன்.

---

வாராயெனையணைய என்ற வர்ண மெட்டு.
இராகம் ஆனந்தபைரவி, தாளம் சாப்பு.
பல்லவி.

நாகந்தீர்த்திருந்த டாகம் சோலையொரு
பாக மேவுமுப யோகம்
தனிவழி யுலவிய வனமதிலதி சுக (நா)

அநுபல்லவி.

வாகான மாங்குயில் மாமயிலாடையில்
வண்ணம் பாட என்
மனமுருகுது பரி மளமுடன் வருகிற

சரணம்.

மந்த மாருதவ சந்தமானந்தவை
போகம் மேவனுந்தவ மேபாகம்
மதுகர மிசைபயில் வதுநயமே (தா)
சந்தான கிருஷ்ண சௌ பாக்கிய கோலாகலா
சந்துஷ்டி யே செந்
தமிழொடு பழகிய முனிவளர் பொதிகையின் (தா)

---

நாரே நாக்கர் என்ற வர்ன மெட்டு.

பல்லவி.

சோலை சிங்காரம் சொல்லவெகு கெம்பீரம்

அநுபல்லவி

சேலுலாவும் பொய்கையோரம் சேருமாலை நன்னேரம் (சோ)

சரணங்கள்.

நல்லரி மல்லிகைப்பூ முல்லையுடன் சாதியே
செல்வமருக் கொழுந்தும் செவந்திப் பூவுஞ்சோதியே ()

காக்ஷியிரு வாக்ஷிமலர் தாக்ஷியில்லை மந்தாரை
மாக்ஷி மைக்கனிரசங்கள் வடிந்தன செந்தாரை (சோ)

பிச்சியுஞ் சாமந்தியும்பி ளிக்கும் வெட்டி வேருமே
செச்சை நந்தியா வட்டையும் செண்பகமுஞ் சேருமே ()

வண்டினம் புரண்டுமது வுண்டுபாடுங் காந்தாரம்
கொண்ட செவிக் கானந்தம் குயில் குருவிசஞ் சாரம் ()

தென்றலு மகரந்தத்தை நன்று கொண்டு பூசுமே
மன்றல் முத்துசாமிகவி வண்ணம் போல வாசமே. ()

---

இராகம் மோகனம், தாளம் ஆதி.

பல்லவி.

தேஜோமயா னந்தம் நான்
தெரிசித்திடஅற் புதஙப்பந்தம் (தே)

அநுபல்லவி.

மாசேதவிரும் பூரணமதியம்
மாமேருவெனும் பாரவதிசயம்
மஞ்சமிகுஞ்சய னந்தனிமண்டியி
ருந்ததுகண்டும கிழ்ந்தது சிந்தை. (தே)

---

பல்லவி.

சரபமுத்துசாமி காளி
தாசனை நிதமும் பூசனைபுரியும் (சர)

அநுபல்லவி.

புரவலன் நானும் போஜமன்னான்
பூவாய் உன்னொரு ஆவல்கண்ணான்
கருது புத்திஸா கர்த்தபாளன்
கட்டுறைக் கடங்கிவிட் டேன் குணாளன் (சா)

சந்தவிருத்தம்

சிவனார் செலுத்து ரதமே ஒடித்த
திரளான முக்கண் முதல்வோனே
தவயோக சித்தர் குணசீல பக்தர்
தமை தாரகத்தில் வளர்வோனே
கவலான பற்று மனமாயை யுற்று
கடையார் தமக்கு ளதிதூரர்
அவிரோத மிட்டிவ் வடியேனை ரக்ஷி
அமலாது திக்கை இறையோனே.

இராகம் இந்துஸ்தான் தோடி, தாளம் ஆதி.

பல்லவி.

தென்மதுரை மீனாக்ஷி பாதந் தெரிசிக்கவேணும் (தெ)

அநுபல்லவி.

சிந்தைக் கின்பம் சந்த தமுந்தோணும் (தெ)

சரணங்கள்.

சொன்மணிச் சோதிக்கு விண்மணியாகிய
சூரியனு நாணும்
சோபிதஞ்சேர் ஆபரணம் பூணும் (தே)
காலமெல்லா மலங் கோலமாயைக்குள்ளே
கட்டுப்பட லாமா
மேலாமோக்ஷம் விட்டுவிடலாமா (தே)
சாதுஜனப்பிரிய சரபமாமுத்து
சாமியுடன் கூடி
பாதுகாக்கும் பஜனையைப் பாடி (தே)

---

தும்ஜாதீது முஸ்பர்க்கு பான் என்ற வர்ணமெட்டு.

இராகம் கமாசு, தாளம் ஆதி.

ஆறுமுக முடையாய்—செங்கையி
லழகிய வேற்படையாய்
ஏருஞ்சிகி யுடையாய்—காத்திடுதற்
கேனோஇன்ன முந்தடை—இறையவ
னேயித நாண் கொடியாய்
என்மீ தினம் வாதுசெய்—வதாகாதே
செய்தா லுனை நீங்கிப்பா—வம் போகாதே
ஏற்றினேன் கல்யாண—சுந்தரனே (ஆ)

பஜாயுமே தில்ஸேனகாஜுஸே.

இராகம் கமாசு, தாளம் ஆதி.

பல்லவி.

மயூர மிசையேறி வாவேலா திரு
வள்ளி தெய்வயானை மகிழ்கூர் சிலா (மயூ)

அநுபல்லவி.

தாருகனொடுபல தானவரைவென்றவனே
சாயாத வேங்கைமர மாளவனம் நின்றவனே
வாருசடையோன் செவியில் மந்திரம்புகன்றவனே
மானில மீதிசைய முத்தொழில் பயின்றவனே
வாவாகல் யாணசுந்தரன்பணியுமேலவா
வையாபுரி வாழ்பவனே (மயூ)

ஜப்த கலந்தரு என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் கமாசு—தாளம் ஏகம்

கண்ணிகள்.

சப்தங்கலந்தசி லம்பணிபதமுறு
சரவணபவ ஒம் குருநாதா
தாரணிமிசைதினம் சாற்றிப முறைகளுன்
தண்செவி புகவிலை யோநீதா
சத்திவேலெடுத்தபன்னி ரண்டுகைப்பனே கேட்கும்
முத்தி வீடளித்திடற்கு கந்தமெய்யனே மறை

மூலாவு மையவள்சுதா மன
முன்னி நின்ற னன்கல்யாண
சுந்தரன்சதா மிகு (சப்)

---

தாமோதரராமா என்ற வர்ன மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு, தாளம் ஆதி.

பல்லவி.

ஆவலானேன் சேவையி னியருள்பெம்மானே

அநுபல்லவி

ஆமோகர வடம் தாமோதர னேநீ
ஆளாம லேவிணி லேநானை யாக்குவ தேனே. (ஆவ)

சரணம்.

பூமகள் மருவும் புருஷோத்தமனே
மாமடுவில்யானை தன்னைக்காத்தவனே
பூமனையுந்தியிற் பூத்தமாதவனே
நேமமாய்க் கல்யாண சுந்தர தாசற்குத் தானே. (ஆவ)

---

தாயே நமஸ்காரம் என்ற வர்ன மெட்டு.

கண்ணிகள்.

வாசுதேவயோகா வரமருள்வராகா
தேசுயருந்தேகா செப்பாள்மருவுமோகா

ஜெகநாத விவேகா மிகுந்

திடத்தகஞ்ச வடிக்குத்தொண்டுசெய்

திருக்கச்செய் யீசா

பூந்துளபத்தாரா புகழும்ரகுவீரா

வாய்ந்திடுமுதாரா மலரடியைத்தாராய்

திருமா லெனும் பேரா சிறு

வனுக்கருள்புரி சிறைக்கருடன்மே

விருக்குமொய் யாரா. (வர)

---

இராகம் இந்துஸ்தான் தோடி, தாளம் ஆதி.

பல்லவி.

சங்குசக் ராயுதனே வெண்

சங்குசக் ராயுதனே.

அநுபல்லவி.

சதுர்மறைதே டரியகுண

கரமுதலே பரவெளியே

சாலமான தேசெய்யாம

லாளுவா யிவ்வேளையே (சங்)

சரணங்கள்.

பாரமலையை யெடுத்தவனே விண்

மாரியதனைத் தடுத்தவனே

மாயாவிலாசா வாஸ்ரீனிவாசா

வனமதில்மான் படகணையே
வியதிரனே மலிபுயனே
மாதுசீதை நாதனுன
சிதராலோ காதரா (சங்)

யாணர்மிகுந்தமி ழாலேகவி
யாணசுந்தரன்வ ணக்கஞ்சொலி
யாசித்தேன் நின்றாள் பூசித்தேன் நிற்க
அருளுவையே பரமதபா
பரபுயல்மே னிபபுனிதா
ஆணையாதி மூலமென்ன
வோதிநின்ற காலைசென்ற (சங்கு)

---

மஞ்சுநிகர்க்குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு, தாளம் ரூபகம்.

## கண்ணிகள்.

செங்கைவடி வேல்முருகையா சிவசிவாச ரவணபவா
சேவடிது நித்தனன் மெய்பா என்
சிந்தைநொந்துவ ருந்துகின்றதை யிந்தவேளையகற்றவந்தருள்
தேசிகனும்பன்னிருகையா தினமுமுன்றன் செவியிற்படச்
செப்பிடு முறையெலாம் பொய்யா.

மங்கைவள்ளிகுஞ்சரிபாகா வனசன் முதல் சுரர்கள்பணி
மாமலர்க்கடம்பணிவாகா அன்று
மாசுபுரியுமநி சாசரர்கள்குலம் நாசமுறும்படி யாசமரம்விளை
வல்லமை மிகுந்தநல் யோகா மரகதமா மயிலின்மிசை
வந்தருள் வாயாரண யூகா

எங்கணும் நிறைநிரந்தரா எழில்பழநிக் கிரிவளரும்
ஏந்தமேல வள்ளாறு கந்தரா சரு
வேசன்மிகி முபதேச குகைதொறும்வாச அடியவர் பாசவினையற
இயற்றிடுஞ் சுகிர்ததந்திரா இமவாசன் மகளருளும்
என்னையா கல்யாண சுந்தரா.

---

நாரதன்சொன்ன காரணப்படி என்றமெட்டு.

இராகம் இந்துஸ்தான் ப்யாகு, தாளம் ரூபகம்

## கண்ணிகள்.

மன்றலார்பரங் குன்றமாநகர்
வந்திடுங்கதிர் வேலா குற
வள்ளிகுஞ்சரி லோலா நம்பும்
வானவர்க்கனு கூலர் மன்றுள்
மாரியேபநட மாடுவான்பெரு
மைந்தனனசு சீலா.
உன்றனைக்கதி என்றுநான்சதா
உன்னினதறி யாயா என்றன்

ஊழ்வினைபகற் றுயர் மறை
ஓதுஞ்செந்துவர் வாயா விண்ணில்
ஓங்குமேருவைத் தாங்கியேசெண்டால்
உடைத்திடுங்கார்த்தி கேயா.

அற்பவாழ்வித கற்பநாள்வரை
அழிந்திடாதென வெண்ணி பணத்
தாசையாலிந்த மண்ணி லுளளார்க்
காள்தாய்த்தொண்டு பண்ணி மன
மலுத்திடாதுநின் வலுத்ததாண்மலர்
அருளுவாயருள் நண்ணி.

---

என்னடி நான்பெற்ற மங்கைஎன்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு, தாளம் ரூபகம்.

## கண்ணிகள்.

தென்மதுரை மீனம்பிகையேதடாதகையேஅம்பாவிகையே-என்றன்
தின்மைநீக்காதமென் வகையே உன்றன்
திருமலரடியிணை நிதந்துதி புரியடியவன்மிசை யிதுதகு.
சித்தம்வைத்தாள வக்கரையே னிலை
உத்தமிபாம் பராபரையே.

புன்மையேனெய்துக்கவலையே எண்ணத்திலையே கடலலையே-எனப்
போன்றமென்சித்தத்தி னிலையே யார்பால்

புகலுமேவனிது புரமெரிபட நகைபுரியரனொடு திடமுடன்
பொற்சபையாடுங் கவுரியே சிக
ரச்சிலம்பீன்ற குமரியே.

யான்கடைத்தேறுவதென்றோ மைந்தனன்றோயாவனென்றோ-தயை
யாதுஞ்செய்யா துற்றாய் நன்றோ திரு
அறிவாகினி சிவயோகினி பரிவாயுன தருளீகுவாய்
ஆரணி சக்கர பாணி மகிழ்
நாரணி யானகல் யாணி.

---

ஆலிலைமேற் பள்ளிகொண்ட என்ற வர்னமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

அங்கசைபாய்ப் பேசவந்தாய் கைக்குள்ளாக நானுமேமே
லாமினிக்கி யாதிருநல் லூரனே—முத்து
சாமிதமிழ்ச் சொல்லினலங் காரனே.

குப்பையணைந் தானுங்கோழி வைப்பதுண்டு முட்டையுந்தக்
கொள்கைபற்றி யுள்ளடங்கி யோசிப்பாய்—மனந்
துள்ளினுற்போய் கள்ளிகண்முன் யாசிப்பாய்

வேணுமென்றால் வேணுமேபின் வேண்டாமென்றால் வேண்டாயேநீ
வீணுக்கென்ன பாணிக்கிற சேதியே—மண்ணில்
ஆணுக்கும்பெண் ணுக்குஞ்சரி நீதியே.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

நாரதன்சொன்ன காரணப்படி
நாண்மலர்ப்பெருங் கண்ணி தனை
நாளுமேமன மெண்ணி நிறை
நறுமணச்சோலை நண்ணி அவள்
நன்மொழியதா லைபுயங் குக
நாதனைமோக முன்னி

தேரதன்மேலே சித்தசனைறிச்
சென்றுசென்றுகைப் பாணம் எய்ய
வென்றிபின்றியே நாணம் சொல்ல
நன்றுகொள்வம்ப யாணம் ஜெயஞ்
சேர்ந்தமேனிய னீன்ற வேலனை
செய்குவேன்மனத் யானம்.

அப்பசுந்தமிழ்ச் சுந்தரர்க்கேயுன்
அப்பனும்ஒரு தூது கிருஷ்ணன்
அன்றிஅர்ச்சுனற் கேது நினக்
கண்ணனைவந்த போது உற்ற
அன்பனைஏழை துன்பமேதவிர்த்
தாளவும் யேந்த காது.

ஒப்புமிங்குனக் கென்றுதானித்தம்
ஓமலிக்குதே பூமி தமிழ்
உடுமலைமுத்து சாமி சொன்னல்
லூர்அமுதப்பேர் வாமி ஆனை
உன்னன்னைமெச்சு மண்ணமேலே எந்தன்
னூழ்வினைதீர்ப்பாய் நேமி.

## ஸ்ரீ மீனாக்ஷியம்மை திருக்கல்யாணம்.

அம்மை திக்குவிஜயம் சோமசுந்தரர் தர்க்கம்.

இராகம்-இந்துஸ்தான் தோடி, தாளம் சாப்பு.

பஜாயிமே தில்பேல காணுமீச என்ற வர்ணமெட்டு.

### கண்ணிகள்.

என்னைக்கண்டு கைவில்லைக்கீழ்ப் போட்டாயே
உன்கை வல்லமையை என்முன்னே காட்டாயே
வந்தசண்டையிலே நந்திதேவர் ஓடோட
அந்தசந்தடியில் சண்டேசர் ஊடாட
முத்துசாமிகவி மாலையெல்லாம் நீசூட
நான்—சங்கதியுந்தெரிந்து முன்காணநேர்நாட (என்)

### மங்களம்

இராகம் சுருட்டி, தாளம் ஆதி.

### கண்ணிகள்.

நித்யமங்களம் சுகிர்தஜெய (நித்ய)
மநு நிருபர் நீதி பெறு
தரணிபாதி யுறு (நித்ய)
சத்யலோக சரஸ்வதி சதுர்வேதம்
மெய்த்த விந்து நாதம்
அபரிமித முற்ற ஜீவபேதம்
சரபகவி முத்துசாமி கீதம் (நித்ய)

முற்றுப்பெற்றது.

THE MADURA TAMIL SANGAM மதுரைத் தமிழ்ச் சங்கம்



## இராஜ வாழ்த்து.

தாஜ ராஜ தாஜ ராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் காம்போதி-தாளம்-ஆதி.

### கண்ணிகள்.

ஞாயமான செங்கோல் இங்கிலீஷ் ராஜரீகமே—எந்த
நாளைக்கும் மாமுத்துச்சாமிக்கும் பேர்வைக்கும் ஞானயோகமே
நம்புதபாலுந் தந்தியும் வித்யாரம்ப ஹைஸ்கூலும்
நாடுங் காலேஜோடும் வைத்திய நன்னயமும் மேலும்
ரயிலுங் கப்பலு முன்கண்டோமோ நாளிதுபோலும்
நாளிதுபோலும் நாளிதுபோலும் நாமிது போலுமே. (ஞாய)

---

## முக்கிய அறிவிப்பு ரிஜிஸ்தர் காபிரைட்.

இதனால் சகல புஸ்தகக் கடைக்காரர்களுக்கும் பப்ளிஷ் செய்யும் தொழிலாளர்களுக்கும் தெரிவிப்பது:—

உடுமலை முத்துசாமிக் கவிராயர் இயற்றிய பக்திரஸ கீர்த்தனங்கள் என்ற தலைமை யிட்ட புஸ்தகமிதை நாமே மனப்பூர்வமாக மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம் இ. மா கோபாலகிருஷ்ணக்கோனுரவர்களுக்கு ரிஜிஸ்தர் செய்துகொள்ளும்படி உத்திரவு கொடுத்திருக்கிறோம். ஆகையால் இப்புத்தகத்தையாவது இதிலுள்ள பாடல்களில் எதையாவது அச்சிடுவார்களேயானல் ஷையார் கோரும் நஷ்டத்துக்கெல்லாம் பாத்தியப்படுவார்கள் என்பதைத்திட்டமாய் அறியவேண்டியது.

இப்படிக்கு,

உ. முத்துசாமிக் கவிராயர்.

---

134

## விடா நகைப்பை விளைவிக்கும்

# வினோதவிகடசிந்தாமணி.

நண்பர்கள் இதுவரை விகட புஸ்தகங்கள் அநேகம் பார்த்திருப்பீர்கள் ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாக இராதென்பது திண்ணம்.

இதில் பாரதத்துக்கு ஈரதம், ராமாயணத்துக்கு ஈமாயணம், வெண்பாவுக்கு கிண்பா, வண்ணத்துக்கு கிண்ணம், என்பதைப் போன்ற ஒவ்வொன்றுக்கும் எகனைக்கு முகனையாக அநேக பாக்களும் யுக்தி சாதுர்யவாக்கியங்களுமாக ஆதிமுதல் அந்தம் வரை விகடப்ரசங்கமாகவே அமைக்கப்பெற்றிருக்கிறது. அநேக டிராமா கம்பெனியார்களும் வெளி நாடகக் கம்பெனியார்களும் நம்மிடம் நெடுநாளாகக் கேட்டுக்கொண்டதின் நிமித்தம் விகடப்ரசங்கத்தில் தேர்ச்சி யடைந்த தகுந்த வித்வான்களைக் கொண்டு பிரயாசையோடு எழுதி அச்சிட்டிருக்கிறது. வாங்கி வாசிப்பவர்களுக்கும் கேட்பவர்கட்கும் மனதைச்சிறிதும் சோராது விடாநகைப்பைக்கொடுக்குமென்பது புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்கே நன்கு விளங்கும்.

இதன் விலை அணா 0—4—0.

## ஷை இரண்டாம் பாகம்,

இதில் பிரசங்கத்திற்குரிய பக்கத்திருமுறை கெக்கெக் கென்று சிரிக்கச் செய்யும் விகடர் கதைகளோடேனும் விகடக்கதைகள் அநேகம் அடங்கியுள்ளன

விலை அணா 0—2—0

பலவேசங்களி லொன்றாகிய கோமாளிப்பாட்டு

இதுவும் விகடமாகவே இருக்கும் 0—6—0

ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி முடிசூட்டுத் தர்பார் கீதங்கள்

முத்துச்சாமிக்கவிராயரவர்க ளியற்றியது டான்ஸ் வர்ணமெட்டு

இதன் விலை அணா 0—1—0

# லீலாவதிசுலோசனை சரித்திரம்.

நாடகப்பிரிய நண்பர்களே! கவனிப்பீர்களாக. இ
வரை ஏற்பட்டுள்ள டிராமா சரித்திரங்கள் எவ்வளவோ
பார்த்திருப்பீர்கள். அவைகளைப்போலல்லாது இதில் சி
ங்காரம், வீரம், சோகம் என்ற பாகங்கள் மூன்றும் ஒரு
ங்கே அடங்கியுள்ளது. ஆனால் ஒவ்வொரு பாகங்களிலும்
படிக்குக்கேற்ற இந்துஸ்தான் பார்ஸி கெஜல், டோமா
ரில்லானா, டப்பா முதலிய தற்காலத்தில் வழங்கி வரு
நவரசமான நாகரீக வர்ணமெட்டுகளால் அமைக்கத் தக்க
ஏராளமாக அடங்கியுள்ளது. புத்தகத்தைவாங்கி வாசிக்கு
நேயர்களும் கேட்கும் நண்பர்களும் உற்சாகமும் ஆன
ந்தத்தையும் அடைவார்கள் என்பது திண்ணம். சிறந்த பட
ங்களுடன் அச்சிட்டு சொற்பகாப்பிகளே தயாரிலிருக்கின்ற
விலை ... ... ... ... ரூ 0-

மகா-௱-௱ஸ்ரீ ஷை முத்துச்சாமிக் கவிராய
இயற்றிய "இராமநாடகம்" கூடிய சீ
வெளிவரும். சொற்பகாப்பிகளே தய
வேண்டுவோர் முன்னதாகவே சீ
தெரிவித்துக்கொள்ளவும். பிந்தின

அகப்படுவதரிது.

இதில் கண்ட புஸ்தகங்களும் இதர புஸ்தக
நமது புத்தகசாலையில் சரசமான விலை
பெற்றுக்கொள்ளலாம்.

**இ. மா. கோபாலகிருஷ்ண**

புக்ஸெல்லர் & ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்,
புதுமண்டபம் மதுரை